# Vellore Corporation

## Street Vendors Loan Details Dailythanthi Newspaper published on 19.07.2020

வேலூரில்

### சாலையோர கடை வியாபாரிகளுக்கு வங்கி மூலம் ரூ.10 ஆயிரம் கடனுதவி

#### மாநகராட்சி கமிஷனர் தகவல்

வேலூர், ஜூலை.19–

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக சிறு, குறு வியாபாரிகள், சாலையோர கடை வியாபாரிகள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் வேலூர் மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் உள்நாட்டு வர்த்தக மேம்பாடு இணை செயலாளர் ராஜேந்திர ரத்னு பங்கேற்று பேசுகையில், மாநகராட்சியில் சாலையோரம் கடை வைத்திருக்கும் வியாபாரிகளுக்கு வங்கி மூலம் ரூ.10 ஆயிரம் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தெரிவித்தார். மேலும் சாலையோர கடை வியாபாரிகளின் எண்ணிக்கை குறித்தும் கேட்டறிந்தார்.

கூட்டத்தில், மாநகராட்சி கமிஷனர் சங்கரன், நகர்நல அலுவலர் சித்ரசேனா, என்ஜினீயர் சீனிவாசன், உதவி கமிஷனர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து கமிஷனர் கூறுகையில், வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட சாலையோரத்தில் ஏராளமானோர் கடைகள் வைத்துள்ளனர். ஆனால் 3,344 சாலையோர கடை வியாபாரிகள் மட்டுமே மாநகராட்சியில் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ளனர். அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வங்கி மூலம் ரூ.10 ஆயிரம் கடனுதவி வழங்கப்பட உள்ளது. அவர்கள் ரூ.10 ஆயிரத்தை 12 மாத தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும். இதற்கு அவர்கள் வங்கியில் உறுதிமொழி பத்திரம் கொடுக்க தேவையில்லை.

கடனுதவி பெற விரும்பும் வியாபாரிகள் ரேஷன்கார்டு, ஆதார் அட்டை, மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை, புகைப்படம், வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல்பக்க நகல் உள்ளிட்டவற்றை மாநகராட்சி அலுவலகத்தில் கொடுக்கலாம். மாநகராட்சி அலுவலர்கள் அவற்றை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள என்று தெரிவித்தார்.

# Street Vendors Loan Details Dailythanthi Newspaper published on 28.07.2020

வங்கிகள் மூலம் கடனுதவி பெற

## 275 சாலையோர வியாபாரிகள் பதிவு செய்துள்ளனர்

### மாநகராட்சி அதிகாரிகள் தகவல்

வேலூர், ஜூலை.28-

கொரோனா தொற்று தடுப்பு ஊரடங்கு காரணமாக சிறு, குறு வியாபாரிகள், சாலையோர கடை வியாபாரிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வங்கிகள் மூலம் ரூ.10 ஆயிரம் கடனுதவி வழங்க வேண்டும் என்று இந்திய உள்நாட்டு வர்த்தக மேம்பாடு இணை செயலாளர் ராஜேந்திர ரத்னு வீடியோ கான்பரன்ஸ் கூட்டத்தில் மாநகராட்சி அதிகாரிகளிடம் தெரிவித்தார். அதைத்தொடர்ந்து வேலூர் மாநகராட்சி பகுதியில் சாலையோர கடை வியாபாரிகள் கடனுதவி பெற விண்ணப்பிக்கலாம் என்றும், அவர்களுக்கு வங்கியில் உறுதிமொழி பத்திரம் இல்லாமல் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வியாபாரிகள் விண்ணப்பிக்க வசதியாக மாநகராட்சி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த 20-ந் தேதி முதல் கடனுதவி பெற விரும்பும் வியாபாரிகள் அளிக்கும் ஆதார் அட்டை, வங்கிக்கணக்கின் முதல்பக்க நகல் உள்ளிட்ட ஆவணங்களை மாநகராட்சி அலுவலர்கள் பதிவு செய்து கொடுக்கிறார்கள். அதன்படி நேற்று வரை 275 சாலையோர கடை வியாபாரிகள் வங்கிகளில் கடனுதவி பெற நேரடியாக பதிவு செய்துள்ளனர். இதைத்தவிர ஆன்லைன் மூலமாக வியாபாரிகள் வங்கியில் கடனுதவி பெற விண்ணப்பித்துள்ளனர் என்று மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.